செ.வெ. எண்:38

20.1.09

# செய்தி

## மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கோ.சி.மணி அவர்கள் தலைமையில் கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்களின் ஆய்வுக் கூட்டம்

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆணைக்கிணங்க இன்று (20.01.2009) தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கோ.சி மணி அவர்கள் தலைமையில் கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்களின் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட்டுறவுத்துறை மானிய கோரிக்கையின் போது அறிவித்த அறிவிப்புகளின் செயலாக்கம், பயிர்க்கடன், மத்தியகாலக் கடன், நீண்டகாலக் கடன், மற்றும் பண்ணை சாராக்கடன் வழங்குவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், விவசாயக் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் அமைப்பதில் உள்ள முன்னேற்றம், நலிவுற்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளை செறிவாக்கும் திட்டத்தில் முன்னேற்றம், கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள், கூட்டுறவு அச்சகங்கள், மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் செயலாக்கத்தின் முன்னேற்றம் ஆகியவை குறித்து கேட்டறிந்தார்.

நடப்பாண்டில் குறுகிய காலப் பயிர்க்கடன் ரூ.1500 கோடி வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில் 31.12.2008 வரை ரூ.1157 கோடி அளவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஒரு இலட்சம் விவசாயிகளைக் கொண்டு, 10000 விவசாயிகள் கூட்டுப் பொறுப்புக் குழுக்களாக அமைக்க திட்டமிட்டதில் 31.12.2008 வரை 11,089 குழுக்கள் அமைக்கப்பட்டு குறியீடு மிஞ்சப்பட்டுள்ளது. இதில் 7083 குழுக்களுக்கு ரூ.72.65 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது.

நலிவுற்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் நிதி ஆதாரத்தைப் பெருக்க ஒவ்வொரு வங்கிக்கும் குறைந்த வட்டியில் 20 இலட்சம் ரூபாய் காசுக் கடன் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை 907 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் ரூ.178.08 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மற்றும் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் செயல்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் பயிற்சி அளிக்கப்பட்டு, தற்போது நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளில் மட்டும் கட்டுப்பாடற்றப் பொருட்கள் 31.12.2008 வரை ரூ.340.43 கோடி அளவிற்கு விற்பனையாகியுள்ளது. வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் ரூ.477.59 கோடி அளவிற்கு வேளாண் விளைபொருட்கள் விற்பனையாகியுள்ளது. இதுபோன்று அனைத்து இனங்களிலும் உரிய வகையில் கண்காணித்துக் குறியீட்டினை முழுவதுமாக எய்தி முன்னேற்றம் கண்டிட அலுவலர்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறைச் செயலாளர் திரு.க.சண்முகம், இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு. யத்தீந்திர நாத் ஸ்வேன்,இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர்கள் திரு.க.பாலச்சந்திரன்,இ.ஆ.ப., திரு. ந. அசோகன், திரு. எல்.சித்திரசேனன், திரு. அ. சங்கரலிங்கம், திரு.க.ம.தமிழரசன், திரு.இரா.ஜெயராம், திரு.ப்பி. இராஜேந்திரன் மற்றும் கூட்டுறவுத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9

D(P/PR)